**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-3** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமர் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்).**

**(9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, R.S.பேக்கரியில் டீ மாஸ்டராக கூலி வேலை செய்கிறேன். சம்பவ சமயத்தில் அந்த கடை 91 காபி கபே என்ற பெயரில் நடந்து வந்தது. சம்பவ சமயத்திலும் அதே கடையில் டீ மாஸ்டராக வேலை பார்த்தேன். அந்த கடை வேலாயுதம்பாளையம், மூலிமங்கலம் பிரிவில் உள்ளது. அந்த கடையின் உரிமையாளர் பெயர் திருமாறன். என்னுடன் ஜெயந்தி என்பவர்

வேலை பார்த்து வந்தார். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

கடந்த 17.12.2020 அன்று மாலை 4.30 மணிக்கு நான் 91 காபி கடையில் டீமாஸ்டராக வேலை பார்த்து வந்தபோது, கடை உரிமையாளர் திருமாறன் கடைக்கு முன்பாக நின்றுக்கொண்டிருந்தார் என்றும், அங்கு அட்சயா ஹோட்டர் உரிமையாளர் மற்றும் புரோட்டோ மாஸ்டர் கணேசன் என்பவரும் இருந்தார் என்றும், அப்போது ரஞ்சித்குமார் என்பவரும், சலூன்கடையில் வேலை செய்யும் பிரகாஷ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வந்து, எங்கள் கடை முன்பு நிறுத்தினார்கள் என்றும், அவர்களை பின்தொடர்ந்து வந்த மூன்று இருசக்கர வாகனங்களில் எட்டுபேர் வந்தார்கள் என்றும், அவர்களில் ஒருவர் ரஞ்சித்குமாரின் பின்தலையில் வாள்கத்தியால் வெட்டினார் என்றும், ரஞ்சித்குமார் எங்கள் கடைக்கு முன்பு ஓடிவந்தார் என்றும், அதில் ஒருவர் ரஞ்சித்குமாரை துரத்தி வந்து, அவர் காலை தட்டிவிட்டு கீழே விழவைத்தார் என்றும், பின்னால் வந்த இரண்டு நபர்கள் வீச்சருவாளாலும், வாள் கத்தியாலும் ரஞ்சித்குமாரின் முகத்திலும், தலையிலும் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், பின்னர் மற்ற இரண்டு நபர்களும் அவர்களிடமிருந்த கத்தியை வாங்கி வெட்டி, கொலை செய்துவிட்டு, அவர்கள் வந்த வண்டியிலேயே கரூர், பைபாஸ்ரோடு வழியாக சென்றுவிட்டார்கள் என்றும், ரஞ்சித்குமாரை

முதலில் வெட்டியவர் மஞ்சள்கலர் பனியனும், அரைக்கால் டிராயரும் போட்டிருந்தார் என்றும், மற்றொரு வீச்சருவாளால் வெட்டியவர் மொட்டையடித்தும், பிரவுன்கலர் முழுக்கை சட்டை அணிந்திருந்தார் என்றும், அவர்களை தொடர்ந்து வெட்டிய இரண்டு நபர்களும் வெள்ளை முழுக்கை சட்டை போட்டிருந்தார்கள் என்றும், அதில் ஒருவர் கருப்பு கலர் வேட்டியும், மற்றொருவர் கருப்பு கலர் பேண்ட் அணிந்திருந்தார்கள் என்றும், வந்தவர்களின் ஒருஜோடி செருப்பும், இறந்தவரின் ஒரு ஜோடி செருப்பும், அவர்கள் வந்த ஒரு இருசக்கர வாகனமும் அங்கேயே கிடந்தது என்றும், நாங்கள் பயந்துபோய் கடையை சாத்தினோம் என்றும், நடந்த சம்பவம் எங்கள் கடையிலிருந்த சிசிடிவி கேமராவிலும், அட்சயா ஹோட்டலில் இருந்த சிசிடிவி கேமராவிலும் பதிவாகியுள்ளது என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-4** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயந்தி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்).**

**(9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, 91 காபி கபே கடையில் காசாளராக வேலை பார்க்கிறேன். தற்போது அந்த கடை RS பேக்கரி என்ற பெயரில் நடந்து வருகிறேன். அந்த கடையில் அ.சா.3 டீ மாஸ்டராக வேலை பார்க்கிறார். திருமாவளவன் என்பவர் உரிமையாளராக இருந்தார். எங்கள் கடைக்கு பக்கத்தில் அட்சயா ஹோட்டல் உள்ளது. அந்த கடையின் உரிமையாளர் சிவக்குமார். தற்போது அந்த கடையும் வேறு பெயரில் நடந்து வருகிறது.

சம்பவம் நடந்த 17.12.2020 அன்று கடையின் உள்ளே வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன். எங்கள் கடையில் கண்காணிப்பு கேமரா உள்ளேயும், வெளியேயும் உள்ளது. கடைக்கு வெளியே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. சம்பவத்தை நான் பார்க்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

கடந்த 17.12.2020 அன்று மாலை 4.30 மணிக்கு நான் 91 காபி கடையில் காசாளராக வேலை பார்த்து வந்தபோது, டீமாஸ்டர் ராமர் கடைக்கு வெளியே டீ போட்டுக்கொண்டிருந்தார் என்றும், கடை உரிமையாளர் திருமாறன் கடைக்கு முன்பாக நின்றுக்கொண்டிருந்தார் என்றும், அங்கு அட்சயா ஹோட்டல் உரிமையாளர் மற்றும் புரோட்டோ மாஸ்டர் கணேசன் என்பவரும் இருந்தார் என்றும், அப்போது ரஞ்சித்குமார் என்பவரும், சலூன்கடையில் வேலை செய்யும் பிரகாஷ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வந்து, எங்கள் கடை முன்பு நிறுத்தினார்கள் என்றும், அவர்களை பின்தொடர்ந்து வந்த மூன்று இருசக்கர வாகனங்களில் எட்டுபேர் வந்தார்கள் என்றும், அவர்களில் ஒருவர் ரஞ்சித்குமாரின் பின்தலையில் வாள்கத்தியால் வெட்டினார் என்றும், ரஞ்சித்குமார் எங்கள் கடைக்கு முன்பு ஓடிவந்தார் என்றும், அதில் ஒருவர் ரஞ்சித்குமாரை துரத்தி வந்து, அவர் காலை தட்டிவிட்டு கீழே விழவைத்தார் என்றும், பின்னால் வந்த இரண்டு நபர்கள் வீச்சருவாளாலும், வாள் கத்தியாலும் ரஞ்சித்குமாரின் முகத்திலும், தலையிலும் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், பின்னர் மற்ற இரண்டு ......

நபர்களும் அவர்களிடமிருந்த கத்தியை வாங்கி வெட்டி, கொலை செய்துவிட்டு, அவர்கள் வந்த வண்டியிலேயே கரூர், பைபாஸ்ரோடு வழியாக சென்றுவிட்டார்கள் என்றும், ரஞ்சித்குமாரை முதலில் வெட்டியவர் மஞ்சள்கலர் பனியனும், அரைக்கால் டிராயரும் போட்டிருந்தார் என்றும், மற்றொரு வீச்சருவாளால் வெட்டியவர் மொட்டையடித்தும், பிரவுன்கலர் முழுக்கை சட்டை அணிந்திருந்தார் என்றும், அவர்களை தொடர்ந்து வெட்டிய இரண்டு நபர்களும் வெள்ளை முழுக்கை சட்டை போட்டிருந்தார்கள் என்றும், அதில் ஒருவர் கருப்பு கலர் வேட்டியும், மற்றொருவர் கருப்பு கலர் பேண்ட் அணிந்திருந்தார்கள் என்றும், வந்தவர்களின் ஒருஜோடி செருப்பும், இறந்தவரின் ஒரு ஜோடி செருப்பும், அவர்கள் வந்த ஒரு இருசக்கர வாகனமும் அங்கேயே கிடந்தது என்றும், நாங்கள் பயந்துபோய் கடையை சாத்தினோம் என்றும், நடந்த சம்பவம் எங்கள் கடையிலிருந்த சிசிடிவி கேமராவிலும், அட்சயா ஹோட்டலில் இருந்த சிசிடிவி கேமராவிலும் பதிவாகியுள்ளது என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

Spl. Sessions Case No. : 21/2023 (Mother Case in S.C.No. 48/2021)

Deposition of witness for : Prosecution - **PW-5**

Defense

| | | | |
|---|---|---|---|
| Name | : வான்மதி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(7 ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்).**

**(9 ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9 ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, காய்கடை வைத்துள்ளேன். இவ்வழக்கில் இறந்தபோன ரஞ்சித்குமாரை எனக்கு தெரியும். அவர் என் கடைக்கு பக்கத்து கடையில் எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வந்தார். அவருக்கு கடை வைத்து கொடுத்தேன். பைனான்சில் கடன் வாங்கியும் கொடுத்தேன். அவருக்கும், அவர் மனைவிக்கும் ஏற்பட்ட பிரச்சினையில் ரஞ்சித்குமார் கைதாகி, கரூர், கிளைச்சிறையில் இருந்தார்.

அவர் சிறையிலிருந்து வெளியே வந்தபிறகு, என் வீட்டில் பத்து நாட்கள் இருக்கட்டும் என்று அவர் அம்மா கொண்டு வந்து விட்டார்.

சம்பவத்திற்கு முந்தைய நாள் முசிறியில் உள்ள அவர் நண்பரை பார்த்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு, என் வீட்டிலிருந்து ரஞ்சித்குமார் இருசக்கர வாகனத்தில் சென்றார். பின்னர், மறுநாள் காலை 6.30 மணிக்கு என் வீட்டிற்கு நடந்து வந்தார். வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு, தூங்கிவிட்டு, மாலை 4.30 மணிக்கு எழுந்தார். அவரது இருசக்கர வாகனம் எங்கே என்று கேட்டதற்கு, பைபாஸ் ரோட்டில் உள்ள கடையில் நிற்கிறது, அதை எடுத்து வருகிறேன் என்றும், சிம் வாங்குவதற்கு ஆதார் கார்டு வேண்டும் என்று, என்னிடமிருந்த அவருடைய ஆதார் கார்டையும் வாங்கிக்கொண்டு, வீட்டிலிருந்து வெளியே சென்றார். பின்னர், 5.30 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து வந்து, ரஞ்சித்குமாரை தெரியுமா என்று கேட்டனர். நான் தெரியும் என்று சொல்லி, ரஞ்சித்குமாரின் அப்பா, அம்மா போன் நெம்பரை கொடுத்தேன். பின்னர், வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு என்னை அழைத்துச்சென்றனர். அங்கு வைத்து இரவு 10.00 மணிக்குதான் ரஞ்சித்குமார் இறந்த விவரம் எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

ரஞ்சித்குமார் என் வீட்டில் தங்கியிருந்தபோது, அவருக்கும், அவர் நண்பர்களுக்கும் தகராறு ஏற்பட்டது பற்றி என்னிடம் கூறவில்லை. ரஞ்சித்குமாரும், அவருக்கு நண்பர்களாக இருந்த எதிரிகள் கலையரசன், பிரசாந்த், பிரசாத், கோகுல்நாத், ஷேக்தாவுத் ஆகியோர்களை எனக்கு தெரியும் என்றும், அவர்கள் ரஞ்சித்குமாருடன் ஒன்றாக வேலை பார்த்து வந்தனர் என்றும், அதனால் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும், கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக ரஞ்சித்குமாருக்கும், கலையரசனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு, அடித்துக்கொண்டனர் என்றும், அதை ரஞ்சித்குமார் என்னிடம் கூறினார் என்றும், ரஞ்சித்குமார் திருச்சிக்கு சென்று, சிறையிலிருந்த அவர் நண்பர் ஜெகன் என்பவரை பார்த்துவிட்டு திரும்பி வந்தார், அப்போது சிறையிலிருந்த ஜெகனுக்கும், சிறையிலிருந்த கூல்மணிகண்டன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது என்றும், பின்னர், கூல்மணிகண்டனையும் மனு போட்டு ரஞ்சித்குமார் சிறைச்சாலையில் பார்த்து, திருச்சியை தாண்ட மாட்டாய் என மிரட்டி வந்ததாக என்னிடம் கூறினார் என்றும், மணிகண்டன் சிறையிலிருந்து வெளியில் வந்ததால் எனக்கு ஆபத்து உள்ளது என்று என்னிடம் ரஞ்சித்குமார் கூறினார்எ ன்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரஞ்சித்குமாரை வெட்டி விட்டார்கள் என ரஞ்சித்குமாரின் அப்பாவிற்கு நான்தான் போன் மூலம் தகவல் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-6** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : சூர்யா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்).**

**(9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, தற்காலிக ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். சாட்சி கோபாலகிருஷ்ணன் என் நண்பர். அவருக்கு சொந்தமான TN 47 AT 5008 என்ற பதிவு எண் கொண்ட TVS SPORT இருசக்கர வாகனம் உள்ளது. அந்த இருசக்கர வாகனத்தை நான்தான் வைத்திருந்தேன். மேற்படி வாகனத்தை எனது வீட்டிற்கு வெளியே வைத்திருந்தேன். வண்டியின் சாவியையும் டேங்க் கவரில் வைத்துவிட்டு, 17.12.2020 அன்று என் மாமா வீடான பளையபாளையத்திற்கு ...........

சென்றுவிட்டேன். அன்றைய தினம் என் வீட்டிலிருந்த இருசக்கர வாகனத்தை யார் எடுத்துச்சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த வாகனம் என்ன ஆனது என்றும் எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் நான், கடந்த 17.12.2020 அன்று காலை 10.30 மணியளவில் எனது நண்பர் வேலாயுதம்பாளையம், காந்திநகர், பிரபு மகன் பிரசாந்த் என்பவர் எனக்கு போன் செய்து, கரூர் சென்று வர மேற்படி TVS Sport வண்டியை கேட்டார் என்றும், அதற்கு நான் என் அம்மாவிடம் சொல்லிவிட்டு எடுத்துச்செல்லுமாறு சொன்னேன் என்றும், அதன்பிறகு பிரசாந்த் என் அம்மாவிடம் சாவியை வாங்கி எடுத்துச்சென்றார் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி பிரசாந்த் என் நண்பர். என் நண்பரை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

Spl. Sessions Case No. : 21/2023 (Mother Case in S.C.No. 48/2021)

Deposition of witness for : Prosecution - **PW-7**

Defense

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபாலகிருஷ்ணன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்).**

**(9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, பட்டயப்படிப்பு படித்துள்ளேன். என் அப்பா பெயர் நாகராஜன். அவர் தற்போது உயிருடன் இல்லை. TN 47 AT 5008 என்ற TVS Sport இருசக்கர வாகனம் என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா இறந்தபிறகு, அந்த வாகனத்தை நான் ஓட்டி வந்தேன். அந்த இருசக்கர வாகனத்தை என் நண்பர் அ.சா.6 சூர்யா என்பவரிடம் கொடுத்திருந்தேன். பின்னர், அந்த வாகனத்தை இடைக்கால ....

பொறுப்பில் வாங்கிச்சென்றேன். பின்னர், அதை மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-8** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : நவீன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 23rd day of April 2025.

**(7 ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்).**

**(9 ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜர் இல்லை. 9 ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் வேலாயுதம்பாளையத்தில் வசித்து வந்து, அரிமா சங்க ஆம்புலன்சில் ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். கடந்த 17.12.2020 அன்று அரிமா சங்க ஆம்புலன்சில் ஓட்டுநராக வேலை பார்த்தேன். அன்றைய தினம் மதியம் நான் என் வீட்ல் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, வேன் உரிமையாளர் சக்தி என்பவர் எனக்கு போன் செய்து, மூலிமங்கலம் பிரிவுக்கு வருமாறு சொன்னார். நான் ஆம்புலன்ஸ் வாகனத்தில் அங்கு சென்றேன். அப்போது அங்கு ஒரு நபர் இரத்தக்காயத்துடன் கீழே கிடந்தார். அவரது முகம், கை, கால் உடல்முழுவதும் காயம் இருந்தது. நான் அவரை ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு, வேலாயுதம்பாளையம் அரசு ...........

மருத்துவமனை கொண்டு சென்றேன். அங்கு அவரை காப்பாற்ற முடியாது, கரூருக்கு கொண்டு செல்லுமாறு கூறிவிட்டார்கள். நான் அவரை கரூர், அமராவதி மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அமராவதி மருத்துவமனை மருத்துவர்கள், காயம்பட்ட நபரை ஆம்புலன்ஸ் வாகனத்திலேயே பரிசோதித்து, அவர் இறந்துவிட்டார் என உறுதி செய்தனர். பின்னர், இறந்துபோன பிரேதத்தை வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கு குளிர்சாதன வசதி இல்லாததால், கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேதத்தை கொண்டு சென்று பிணவறையில் பிரேதத்தை வைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. போலீசார் என்னை நான்குமாதங்கள் கழித்து விசாரித்தார்களா என்றால் போலீசார் விசாரித்தனர். எப்போது விசாரித்தனர் என்று ஞாபகமில்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.